கவன ஈர்ப்புகள்
[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]
அறிக்கை:

13-4-1986 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவகெங்கை வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் இளநிலை உதவியாளர் திரு. க. மணி என்பவர் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, மாலை சுமார் 2-30 மணியளவில் அலுவலகம் முன்பாக பலத்த வெடிச்சத்தம் கேட்டதாகவும் வெளியில் வந்து பார்த்தபோது ஒரு நாய் படுத்திருந்ததாகவும், அந்நாயின் வாயில் ரத்தம் கொட்டிக் கொண்டிருந்ததாகவும்: இச்சம்பவத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்னால் வருவாய் அதிகாரி அலுவலகத்தின் பின்புறம் வெடிச்சத்தம் கேட்டதாகவும் அங்கு சென்று பார்த்தபோது ஒருநாய் இறந்துகிடந்ததாகவும், கொடுத்த புகாரின்பேரில் சிவகெங்கை காவல்நிலைய குற்ற எண். 94/86 இதச. பிரிவு 286 மற்றும் இந்திய வெடிபொருள் சட்டம் பிரிவு 3-ன் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து கிடைத்த தடயங்களை வெடிமருந்து நிபுணர் ஆய்வு செய்துவருகிறார். காயம்பட்ட மற்றொரு நாயும் இறந்துவிட்டது.

சிவகெங்கையிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவிலுள்ள பையூர் பிள்ளைவயல் என்ற கிராமத்தில் நரிக்குறவர்கள் சொந்தமாக வீடுகட்டி தங்கியுள்ளனர். அவர்கள் சிவகெங்கையைச் சுற்றியுள்ள பகுதிகளில் கரும்புக் கொல்லையிலும், நிலக் கடலை வயலிலும், கதிர்களைச் சேதப் படுத்தும் நரிகளைப் பிடிக்க, 'மாட்டுக் கொழுப்பு' தடவி வைத்திருந்த வெங்காய வெடிகளை நாய்கள் கவ்விக்கொண்டு வந்து, வட்டாட்சியர் அலுவலகத்தின் வளாகத்தில் வைத்துக் கடித்தபோது இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என விசாரணையில் தெரிய வருகிறது.

இருப்பினும் இதுகுறித்து தீவிர புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவத்தின் தொடர்பாக இப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையோ, மக்கள் மத்தியில் பீதியோ இல்லை.

(2) தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பதனிடும் ஆலையில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், டாக்டர் ந. மாசிலாமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

கவன ஈர்ப்புகள்

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர் யூனியனிலுள்ள பால் பதனிடும் ஆலையிலிருந்து திடீரென்று அமோனியா வாயு கசிந்ததைத் தொடர்ந்து அந்த ஆலை அருகே வசிக்கக்கூடிய மக்களுக்கு கடுமையான தலைவலி ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய குளிர்சாதனப் பிரிவு சரிவர செயல்பட்டு வந்தது. 28—4—1986 ஆம் தேதி மாலை, கண்டென்ஷேசன் பிளாக் ஏற்பட்டதால் (Condensation Block) அழுத்தம் அதிகரித்தது. அதனால் அமோனியா வாயு பெறப்படும் பாதுகாப்பு வால்வு திறந்து கொண்டது. இதனால் சிறிதளவே அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது. இதைக்கண்டவுடன் ஒன்றியப் பணியாளர்கள் மழைவரும் முன்பே தண்ணீரில் நனைந்த சாக்குப் பைகளைக் கொண்டு கசிவு ஏற்பட்ட பகுதியை மூடி, அமோனியா வாயு மேலும் கசிவு ஏற்படாமல் நிறுத்தி விட்டார்கள். பத்திரிகையில் வெளிவந்தது போல பாதுகாப்பு வால்வு உடைத்துக்கொள்ளவில்லை. அப்படி உடைபட்டு இருந்தால் 28—4—1986 அன்று மாலை பச்சைப்பால் பதப்படுத்தும் பணி பாதிக்கப்பட்டிருக்கும். பாதுகாப்பு வால்வின் மூலம் வெளியான அமோனியா வாயு சுமார் 5 கிலோ மதிப்பு ரூ. 50 இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. இந்தக் கசிவினால் பொது மக்களோ பணியாளர்களோ பாதிக்கப்படவில்லை. தீயணைப்புப் படையினருடைய உதவியின்றியே, அலுவலகப் பணியாளர்கள் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இந்தச் சிறிய குறையினை தக்க சமயத்தில் நடவடிக்கை மேற்கொண்டு அசம்பாவிதம் ஏற்படாமல் தடுத்துவிட்டனர். குளிர் சாதனப்பிரிவு தடை ஏதுமின்றி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

(3) தருமபுரி மாவட்டம், தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பாக்டரி மூடியிருப்பது குறித்து.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூன்று ஆண்டுக் காலமாக மூடியிருப்பதன் காரணமாக சுமார் 600 தொழிலாளர்கள் வேலையிழந்து அவதிப்படும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்